பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 24 | வெள்ளிக்கிழமை | 08.05.2026 | அதிர்வு 281

**139 மேலதிக வாக்குகளால்**

## மேலும் நீடிக்கப்பட்ட அவசரகாலச் சட்டம்



பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள அவசர 06






**செம்மணி மண்ணுக்குள் பச்சிளம் உயிர்களும் புதைப்பு**

# கைக்குழந்தையின் என்புக்கூடு மீட்பால் நேற்று பெரும் அதிர்ச்சி!

## மனித உரிமை மீறல்களின் கோர முகம் இதுவரை 259 மனித எச்சங்கள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சியில், கைக்குழந்தை ஒன்றின் என்புத் தொகுதிகண்டெடுக்கப்பட்டுள்ளமை பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 10ஆம் நாள் அகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது. 06

# மட்டக்களப்பு வாவியில் மிதந்த இரண்டு ஆண்களின் சடலங்கள்




## பொலிஸார் தீவிர விசாரணை

(கனகராஜா சரவணன்)

மட்டக்களப்பு, சின்ன உப்போடை பகுதி வாவியில் நேற்று மாலை இரண்டு ஆண்களின் சடலங்கள் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சின்ன உப்போடை பகுதியில் உள்ள வாவியில் இருவரது சடலங்கள் மிதந்து கரை ஒதுங்கியிருப்பதை நேற்று மாலை 5 மணியளவில் கண்ட பொதுமக்கள், உடனடியாக மட்டக்களப்பு 07




பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பொது அவசரகால நிலையை நீடிப்பதற்கான தீர்மானம், நேற்று நாடாளுமன்றத்தில் 139 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 145 வாக்குகளும், எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ் எம்.பிக்கள் – தமிழரசுக் கட்சியினரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் – கேட்டுக் கொண்டமைக்கு இணங்க இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பு சமயத்தில் தமிழரசுக் கட்சியின் எட்டு எம்.பிக்களில் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சாணக்கியனும் கோடீஸ்வரனும் சபையில் இருக்கவில்லை. மிகுதி ஆறு தமிழரசு எம்.பிக்களும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சபையில் இருந்தனர். அப்படியாயின் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் தீர்மானத்துக்கு எதிராக ஏழு தமிழ் எம்.பிக்கள் வாக்களித்திருக்க 06

# தமிழரின் அபிலாஷைகளை நிறைவேற்றத் தவறிய அரசு!

## சபையில் அதிருப்தி வெளியிட்ட சத்தியலிங்கம் எம்.பி.



"நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கு வெறும் சட்டத்திருத்தங்கள் மட்டும் போதாது. தமிழ் மக்களின் அரசியல் வேட்கையை நிவர்த்தி செய்வதும், பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதுமே உண்மையான தீர்வாகும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு மற்றும் குடிவரவு, குடியகல்வு சட்டத் திருத்தங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் குறிப்பிடுகையில்,

"அவசரகாலச் சட்டத்தை கடந்த காலங்களில் மோசமாகப் பயன்படுத்தியவர்கள், இன்று அதன் நீடிப்பு பற்றிப் பேசுவது வேடிக்கையானது. இந்த அரசு பதவிக்கு வந்தபோது இருந்த நம்பிக்கை, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றாத காரணத்தால் இப்போது எம்மத்தியில் குறைந்துகொண்டு போகின்றது." – என்றார்.

வடக்கு – கிழக்கு பகுதிகளில் பொருளாதார மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் அறவே இல்லை என்று சாடிய அவர்,

"தாயகப் பிரதேசத்தில் சிறு அல்லது பாரிய முதலீட்டுத் திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. நிலத்தைப் பெறுவதில் உள்ள நிர்வாகச் சிக்கல்களால் முதலீட்டாளர்கள் வருடக்கணக்கில் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

இந்திய அரசு காங்கேசந்துறை துறைமுக அபிவிருத்திக்காக வழங்கிய 2 ஆயிரத்து 200 கோடி ரூபா நிதி பயன்படுத்தப்படாமல், ஆரம்ப வேலைகள் கூடத் தொடங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது.

திருகோணமலை எரிபொருள் சேமிப்பு வசதி தொடர்பாக இலங்கை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இடையே எட்டப்பட்ட உடன்படிக்கை இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை." – என்றும் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணப் போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்துப் பேசிய அவர், நான்கு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தார்.

"யாழ்ப்பாணத்தில் இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்கள் இடையே நிலவும் மோதல்களைத் தவிர்க்க ஒருங்கிணைந்த நேர அட்டவணை அவசியம்.

வவுனியா பஸ் நிலையத்தின் நிர்வாகத்தை தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவிடமிருந்து பறித்து, வடக்கு மாகாணப் போக்குவரத்து அதிகார சபையிடம் ஒப்படைக்க வேண்டும்.

வவுனியா பஸ் நிலையத்தின் பராமரிப்பை வவுனியா மாநகர சபையிடம் ஒப்படைப்பதன் மூலம், அதன் வருமானத்தை மக்கள் சேவைக்குப் பயன்படுத்த முடியும்.

மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சேவையில் 20 வீதக் கட்டுப்பாட்டைக் கொண்டுவரும்போது, ஏற்கனவே அதிக பஸ்களைக் கொண்டுள்ளவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் குறித்து அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

அரசியல் மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தத் தவறினால், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியுமா? என்ற கேள்விக்கு அரசாங்கமே பதில் சொல்ல வேண்டும்." – என்றும் சத்தியலிங்கம் எம்.பி. தனது உரையில் வலியுறுத்தினார்.

# கபில சந்திரசேனவுக்காகக் கூலிக்கு பிணை நின்ற இருவர் சிக்கினார்கள்



## 13 ஆம் திகதி வரை விளக்கமறியல்

ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் கபில சந்திரசேனவின் பிணையாளர்களாக முன்னிலையான இருவர், பணத்துக்காகப் பொய் சாட்சி சொன்னமை அம்பலமானதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2013ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனத்துக்காக "எயார்பஸ்" விமானங்களைக் கொள்வனவு செய்தபோது, 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாகப் பெற்றார் என்று கபில சந்திரசேன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அவருக்கு 100 மில்லியன் ரூபா பெறுமதியான சரீரப் பிணைகளை நீதிமன்றம் விதித்திருந்தது.

கபிலசந்திரசேனவுக்குபிணைவழங்குவதற்காக சாஞ்சி ஆராச்சிவத்தையைச் சேர்ந்த முகமது ரிஸ்வான் மற்றும் முகமது இர்ஷான் ஆகிய இருவரும் பிணையாளர்களாக நீதிமன்றில் முன்னிலையாகினர். எனினும், இவர்களுக்கும் கபில சந்திரசேனவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

விசாரணையின் போது அவர்கள் ஒப்புக்கொண்ட அதிர்ச்சித் தகவல்கள் வருமாறு:-

* தமக்கு கபில சந்திரசேன யார் என்றே தெரியாது.

* தலா 15 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே பிணை நின்றதாக ஒப்புதல்.

* "தேவா" மற்றும் "திஸ்ஸ" என்பவர்களின் தூண்டுதலின் பேரிலேயே நீதிமன்றத்துக்கு வந்ததாக வாக்குமூலம்.

தமக்கு நிலையான வருமானமோ அல்லது தொழிலோ இல்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிணைச் சட்டத்தின்படி, சந்தேகநபரை நன்கு அறிந்தவர் மட்டுமே பிணையாளராக இருக்க முடியும். இந்த விதியை மீறியதுடன், கிராமஉத்தியோகத்தர்சான்றிதழ்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் வாழைத்தோட்டம் பொலிஸார் இவர்களைக் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பு மேலதிக நீதிவான் லஹிரு சில்வா முன்னிலையில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது, சந்தேகநபர்களின் பின்னணி மற்றும் கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்கள் பெறப்பட்ட விதம் குறித்து முழுமையான அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிவான், இருவரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மில்லியன் கணக்கிலான ஊழல் வழக்கில், கூலிக்கு பிணை நின்ற சம்பவம் நீதிமன்ற வளாகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




# பழைய 'பிக்பொக்கெட்' முறை போய் இப்போது 'ஹக்கர்' முறை கொள்ளை

## அரசைக் கடுமையாகச் சாடிய நாமல் எம்.பி.

(ஞான பிரசாந்தன்)

இலங்கையில் தற்போது அரங்கேறி வரும் பாரிய நிதி மோசடிகள் மற்றும் அரசின் நிர்வாகத் திறமையின்மை குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ கடும் சாடல்களை முன்வைத்துள்ளார்.

ஹொரணையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், தற்போதைய அரசை "ஹக்கர்களின் அரசு" என்று வர்ணித்தார்.

"நிதி அமைச்சின் செயலாளர் ஒருவரின் செயற்பாட்டால் 80 கோடி ரூபாவுக்கும் அதிகமான மக்கள் பணம் மாயமாகியுள்ளது. டொலரின் மதிப்பு அதிகரித்துள்ள நிலையில், இந்த இழப்பின் பெறுமதி இன்னும் பல மடங்காகும். இவ்வளவு பெரிய தொகை கொள்ளையடிக்கப்பட்டும், நிதி அமைச்சரான ஜனாதிபதியும், மத்திய வங்கியும் இன்னும் உறக்கத்தில் இருப்பது வேடிக்கையாக உள்ளது." - என்றும் அவர் தெரிவித்தார்.

அரசின் மீதான ஊழல் பட்டியலை வரிசைப்படுத்திய நாமல் ராஜபக்ஷ, பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

+தனியார் வங்கி ஒன்றில் 13 பில்லியன் ரூபா திருடப்பட்டமை.

+ தபால் திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதி கையாடல்.

+துறைமுகத்திலிருந்து 323 கொள்கலன்கள் மாயமாகியுள்ளமை.

பழைய "பிக்பொக்கெட்" முறையைத் தாண்டி, இப்போது அதிநவீன "ஹக்கர்" முறையூடாக அரசு மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கின்றது" என்றும் அவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்.

கச்சதீவு விவகாரத்தில் இந்தியாவோ அல்லது எந்தவொரு மாநில முதலமைச்சரோ இலங்கையின் இறையாண்மைக்கு உட்பட்ட விடயங்களில் தன்னிச்சையாகத் தீர்மானம் எடுக்க முடியாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை ஜனாதிபதியும் நீதி அமைச்சரும் மேடைகளில் பேசி அரசியல் மயப்படுத்துவது வெட்கக்கேடானது என்றும் அவர் சாடினார்.

"மணிக்கு 1000 கிலோமீற்றர் வேகத்தில் நாட்டை நகர்த்துவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று ரயிலின் வேகத்தை 20 கிலோ மீற்றராகக் குறைத்துள்ளனர். மஹிந்த ராஜபக்ஷவின் காலத்துக்குப் பிறகு ரயில் பாதைகளைப் புனரமைக்க எந்தத் திட்டமும் இல்லை. மழையினால் சேதமடைந்த பாதைகளைக் கூட திருத்த முடியாத கையாலாகாத அரசாக இது உள்ளது." என்றும் அவர் கேலி செய்தார்.

அரசின் ஊழல்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறைப்பாடுகள் செய்யுமளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது என்றும், பொய்ப் பிரசாரங்களுக்கு மக்கள் விரைவில் பாடம் புகட்டுவார்கள் என்றும் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தனது உரையில் மேலும் தெரிவித்தார்.





# மகனைப் பறிகொடுத்துவிட்டு நீதி கேட்டால் அவமதிப்பதா?

## ஜனாதிபதி செயலக அதிகாரிகள் மீது அருள் பயஸின் உறவினர்கள் கண்ணீர் புகார்

(எஸ்.நிதர்ஷன்)




யாழ். அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் பலியான சிறுவன் அருள் பயஸின் படுகொலைக்கு நீதி கோரி, ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்ற தமக்கு அவமதிப்பே மிஞ்சியது என்று அந்தச் சிறுவனின் உறவினர்கள் கண்ணீருடன் தெரிவித்தனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் இவ்விமர்சனங்களை முன்வைத்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வேலணை – அல்லைப்பிட்டி பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சிறுவன் அருள் பயஸ் உயிரிழந்திருந்தார். "எம் மகனின் மரணத்துக்கு இதுவரை நியாயம் கிடைக்கவில்லை. மாறாக, எமது குடும்பத்தினர் மீதும் பலியான சிறுவன் மீதும் சமூக ஊடகங்களில் பொய்யான தகவல்களைப் பரப்பி எங்களை அவமானப்படுத்தி வருகின்றனர்" என்று உறவினர்கள் வேதனை தெரிவித்தனர்.

சிறுவனின் மரணம் தொடர்பான உண்மைகளை மறைக்கப் பொலிஸார் கடுமையாக முயற்சிக்கின்றனர் என்றும், தங்களது அன்றாடச் செயற்பாடுகளைக் கண்காணித்து அச்சுறுத்தல் விடுக்கின்றனர் என்றும் அவர்கள் குற்றம் சுமத்தினர்.

இது தொடர்பாக ஜனாதிபதியைச் சந்திக்கக் கொழும்பு சென்றபோது, அங்குள்ள அதிகாரிகள் தங்களை மனிதர்களாகக் கூட மதிக்காமல் திருப்பி அனுப்பினார்கள் என்று கூறி அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்த அவர்கள் தெரிவித்ததாவது:–

"நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் எமது இல்லத்துக்கு வந்து நியாயம் பெற்றுத்தருவதாகக் கூறினார். ஆனால், அதன் பின்னர் அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் கூட அவர் பதில் அளிப்பதில்லை. மக்கள் பிரச்சினையைக் கண்டுகொள்ளாத இவரை எப்படி மக்கள் பிரதிநிதி என்று நம்புவது?" – என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

அதேவேளை, "நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எமது வீட்டுக்கு வரவில்லை என்றாலும், சபையில் எமது மகனின் கொலைக்கு நியாயம் கேட்டுப் பேசியிருந்தார். அவர் செய்ததைக் கூட ஆளும் தரப்பில் இருக்கும் இளங்குமரன் செய்யவில்லை" என்றும் அவர்கள் ஒப்பிட்டுச் சாடினர்.

அநுர அரசும் இந்த விடயத்தில் பின்னடிப்பதாகக் குறிப்பிட்ட உறவினர்கள், எமது மகனின் கொலைக்கு நியாயம் கிடைக்க அனைவரும் முன்வர வேண்டும் என்றும் உருக்கமாக அழைப்பு விடுத்துள்ளனர்.

# பருத்தித்துறையில் லஞ்ச் சீட் பயன்படுத்திய உணவகத்திற்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம்

பருத்தித்துறை நகர சபையின் தடையை மீறி உணவுப் பொதியிடலுக்கு "லஞ்ச் சீட்" பயன்படுத்திய மற்றும் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவு நிலையத்துக்குப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதித்து அதிரடி உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில், வீடொன்றில் அனுமதியின்றி உணவு கையாளும் நிலையம் இயங்குவதாகவும், அங்கு சட்டவிரோதமாக லஞ்ச் சீட் பயன்படுத்தப்படுவதாகவும் பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஸுக்கு முறைப்பாடுகள் கிடைத்தன. இதனடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது பல வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின.

சோதனையின் போது பின்வரும் சட்டவிரோதச் செயல்கள் உறுதி செய்யப்பட்டன.

+ நகர சபையின் அனுமதி மற்றும் உணவு வளவுப்பதிவு சான்றிதழ் இன்றி இயங்கியமை.

+ உணவு பொதியிடலுக்கு தடைசெய்யப்பட்ட "லஞ்ச் சீட்" பயன்படுத்தியமை.

+ உணவுத் தயாரிப்புக்குப் பயன்படும் நீர் பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்தத் தவறியமை.

+ பணியாளர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் இல்லாமை மற்றும் தனிநபர் சுகாதாரம் பேணப்படாமை.

+ சுற்றுச்சூழல் பாதிப்புக்குள்ளாகக் கூடிய பாதுகாப்பற்ற சூழலில் உணவு உற்பத்தி செய்தமை.

இது தொடர்பாக பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஸினால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விசாரணையின் போது, உரிமையாளர் தனது குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டார். இதனையடுத்து, அவருக்குக் கடும் எச்சரிக்கை விடுத்த நீதிவான், ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

பருத்தித்துறை நகர சபை எல்லைக்குள் கடந்த 01.01.2026 முதல் உணவகங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் வீடுகளில் நடைபெறும் பொது நிகழ்வுகளில் லஞ்ச் சீட் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தடையை மீறுவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகர சபை மீண்டும் எச்சரித்துள்ளது.






# சர்வதேச அரங்கில் இலங்கை தனிமைப்படுத்தப்படும் அபாயம்

## டெண்டர் முறைகேடுகள் குறித்து டிலான் கடும் எச்சரிக்கை

(ஞான பிரசாந்தன்)

இலங்கை அரசின் முறைகேடான டெண்டர் நடைமுறைகள் மற்றும் ஊழல்கள் காரணமாக, சர்வதேச அரங்கில் இலங்கை தனிமைப்படுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.




கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், நாட்டின் தற்போதைய நிர்வாகச் சீர்கேடுகளைக் கடுமையாகச் சாடினார்.

நாட்டில் தற்போது நிலவும் கடும் கடவுச்சீட்டு தட்டுப்பாட்டுக்கு அரசின் தன்னிச்சையான தீர்மானங்களே காரணம் என்று சுட்டிக்காட்டிய அவர், அதிர்ச்சித் தகவல்களையும் வெளியிட்டார்.

"ஈ–கடவுச்சீட்டு அச்சிடுவதற்காக விண்ணப்பித்திருந்த தகுதியான போலந்து நாட்டு நிறுவனம் உட்பட ஆறு சர்வதேச நிறுவனங்கள் எவ்வித நியாயமான காரணமுமின்றி நிராகரிக்கப்பட்டுள்ளன.

தகுதியான நிறுவனங்களை ஓரம் கட்டிவிட்டு, அரசுக்கு நெருக்கமான ஒருவருக்கு இந்த ஒப்பந்தத்தை வழங்க திரைமறைவு வேலைகள் நடக்கின்றன." – என்றும்அவர் குற்றம் சுமத்தினார்.

இந்த டெண்டர்நடைமுறையில் தமக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து, போலந்து அரசு ஐரோப்பிய ஒன்றியத்திடம் உத்தியோகபூர்வமாகப் புகாரளிக்கத் தயாராகி வருகின்றது என்றும் டிலான் பெரேரா தெரிவித்தார்.

"போலந்து போன்ற நட்பு நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் முறையிட்டால், அது இலங்கையின் சர்வதேச நற்பெயரைக் கடுமையாகப் பாதிக்கும். இதனால் உலக அரங்கில் இலங்கை தனிமைப்படுத்தப்படும் நிலை ஏற்படும்" என்றும் அவர் எச்சரித்தார்.

"நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் இழைக்கும் தவறுகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். இது தொடர்பான விசாரணைகள் முடியும் வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது பதவிகளிலிருந்து விலகி இருக்க வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் செயற்பாடுகள் நடுநிலையாக இல்லை என்றும், பிணைமுறி உள்ளிட்ட நிதி முறைகேடுகள் குறித்து எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளை அவர் திசைதிருப்ப முயற்சிக்கின்றது என்றும் டிலான் பெரேரா இதன்போது கடுமையாகச் சாடினார்.

# ஷிரந்தி ராஜபக்ஷவின் '40 கோடி வீடு' வதந்தி: சி.ஐ.டியில் மொட்டுக் கட்சியினர் முறைப்பாடு

(ஞான பிரசாந்தன்)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவுக்குச் சொந்தமான 40 கோடி ரூபா பெறுமதியான வீடு எனச் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் செய்தி முற்றிலும் பொய்யானது என்று தெரிவித்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்பாட்டாளர் பசன் கஸ்தூரி நேற்று இந்த முறைப்பாட்டைச் செய்தார்.

முறைப்பாட்டின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பசன் கஸ்தூரி,

"தற்போதைய அரசின் ஊழல்கள் ஒவ்வொன்றாக வெளிச்சத்துக்கு வரும் போது, நாடாளுமன்றத்தில் உள்ள ஆளுந்தரப்பின் 159 உறுப்பினர்களினதும் பல நரம்புகள் அதிரத் தொடங்கியுள்ளன. அதன் வெளிப்பாடே இவ்வாறான பொய்ப் பிரசாரங்கள்." என்று குறிப்பிட்டார்.

"ராஜபக்ஷ குடும்பத்தினருக்குச் சொந்தமாக ஒரு சிறிய விளையாட்டு வீடு இருப்பதாகத் தெரிந்தால் கூட இந்த அரசு சும்மா இருக்கப்போவதில்லை என்பதை நாடு அறியும். அவ்வாறான நிலையில், ஆதாரமற்ற இவ்வாறான செய்திகளை அரசு திட்டமிட்டுப் பரப்புகின்றது." என்றும் அவர் சாடினார்.

நீதி அமைச்சரின் அண்மைக்கால செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்த அவர், "நீதி அமைச்சர் தனது ஆதரவாளர்களுக்கு முன்னால் நின்று கொண்டு வாய்ப்பாடு வாசிப்பதைப் போல், நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்துப் பேசி வருகின்றார். இவ்வாறு அரசியல் மேடைகளில் வழக்குகளைப் பகிரங்கப்படுத்துவதன் ஊடாக, விசாரணைகளின் சுயாதீனத் தன்மை கேள்விக்குறியாகியுள்ளது" என்றும் தெரிவித்தார்.

அரசியல் இலாபத்துக்காக விசாரணைகளை அமைச்சர் திசைதிருப்புகின்றார் என்றும், இவ்வாறான நிலையில் அரசு முன்னெடுக்கும் விசாரணைகளை மக்கள் எவ்வாறு நம்புவார்கள் என்றும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும். ஆயினும் ஆறு பேரே வாக்களித்தனர் என அறிவிக்கப்பட்டது.

அதனால் என்ன நடந்தது என்று தேடிப் பார்த்தேன். சபையிலிருந்த ஏழு தமிழ் எம்.பிக்களும் தாங்கள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தனர் என்று தங்களுக்குள் கூறிக் கொண்டாலும், ஆறு பேரே வாக்களித்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் வாக்களிக்கவில்லை என்று அறிவிப்புப் பலகை காட்டியது. சபையில் தான் சிரேஷ்ட நிலையில் இருக்கின்றார் என்று சுட்டி, அதனடிப்படையில் முன் வரிசை ஆசனத்துக்கு உரிமை கோருகின்ற தகுதி நிலையில் இருக்கும் சிறிநேசனுக்கு தமது வாக்கைச் சரியாக – உறுதியாக – தெளிவாக – அதற்கான பொத்தானை அழுத்தி மேற்கொள்ள முடியவில்லை என்பது பின்னர் விசாரிப்புகளில் புரிந்து கொள்ள முடிந்தது.

இனிமேலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இன்னும் கொஞ்சம் பொறுப்பாக நடப்பது நல்லது.

* * *

மாகாண சபை தேர்தல் முறைமை குறித்து ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக் குழு நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் மீண்டும் கூடியது.

அச்சமயம் சட்டமா அதிபர் தரப்பிலிருந்து பிரதிநிதியாக அக்கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்த இளம் அரச சட்டத்தரணி ஒருவரை வாங்கித் தள்ளினார் எதிரணி சார்பில் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் தமிழரசு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சாணக்கியன்.

தெரிவுக் குழுவின் கடந்த கூட்டத்தில் சில முக்கிய விடயங்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்தைக் கோருவது என்று தெரிவுக் குழு முடிவு செய்திருந்தது.

ஆனால் அந்த விடயங்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்தை சம்பந்தப்பட்ட அரச சட்டத்தரணி நேற்றைய கூட்டத்திற்குப் பெற்று வரவில்லை.

முன்னைய கூட்டத்தின் கூட்ட அறிக்கை தங்களுக்கு இன்னமும் கிடைக்கவில்லை என்றும், அதனால் அந்த விவகாரங்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்தைப் பெற்று வர முடியவில்லை என்றும் அரச சட்டத்தரணி தெரிவுக் குழு முன் நேற்றுக் கூறினார்.

வழமையாக நீதிமன்றின் முன் இப்படித்தான் விடயங்களை கூறி, காலத்தை வெகு ஸிம்பிளாக இழுத்தடிப்பார்கள்.

அரச சட்டத்தரணியின் இந்தப் பதில் சாணக்கியனைச் சீற்றமுற வைத்துவிட்டது.

"கடைசி தெரிவுக் குழுவின் கூட்டம் ஏப்ரல் மாதம் ஏழாம் திகதி நடைபெற்றது. அடுத்த கூட்டம் ஏப்ரல் 22 ஆம் திகதி நடைபெற வேண்டி இருந்தது. அந்தக் கூட்டத்தில் சட்டமா அதிபரின் கருத்துக்களை இங்கு நீங்கள் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் கூட்ட அறிக்கை உங்களுக்கு கிடைக்கவில்லை என்று கடந்த 26 ஆம் திகதிதான் தெரிவுக் குழுவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பி விட்டு வாளா இருந்திருக்கிறீர்கள். அப்படி என்றால் கடந்த 22 ஆம் திகதி நடைபெற இருந்து, ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்கும் கூட நீங்கள் இப்படித்தான் வந்து பதில் கூறி இருப்பீர்கள். இப்போது இன்று மே மாதம் ஆறாம் தேதி நடக்கின்ற கூட்டத்திலும் அதே பதிலை கூறுகின்றீர்கள்" – என்று வைதார் சாணக்கியன்.

சாணக்கியனின் காரசாரமான உரையை அடுத்து இத்தகைய விடயங்களுக்கு பதில் அளிப்பதற்கு சட்டமா அதிபர் அல்லது சொலிஸிட்டர் ஜெனரல் தரத்தில் அரசு தரப்பில் இருந்து அதிகாரிகள் வரவேண்டும் என்ற ஒரு தீர்மானம் தெரிவுக் குழுவின் நேற்றைய கூட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

* 2017 மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டத்தில் உருவாக்கப்பட்ட எல்லை நிர்ணய ஒழுங்கை, நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளாத நிலையில், அது தொடர்பாக பிரதமர் நியமித்த – அவரும் உள்ளடங்கிய – ஐந்து பேர் குழு உரிய அறிக்கையை ஒரு மாதத்தில் கையளிக்காத பின்புலத்தில் அடுத்தது என்ன செய்வது?

* ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் சுமந்திரன் தனிநபர் பிரேரணையாக சமர்ப்பித்த மாகாண சபை தேர்தல் சட்டம் மூலம் உயர் நீதிமன்ற பரிசீலனையின் பின்னர், உயர் நீதிமன்றம் கூறிய திருத்தங்களுக்கு அமைவாக நாடாளுமன்ற ஒழுங்குக் குழுவால் திருத்தப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்டு, அது மூன்றாவது வாசிப்பு வரை முன்னேறி இருந்தது. அதையே தமது தனிநபர் சட்டம் மூலமாக இந்த பத்தாவது நாடாளுமன்றத்தில் சாணக்கியன் சமர்ப்பித்திருந்தார். ஆனால் அது உயர் நீதிமன்ற பரிந்துரைகளை உள்ளடக்கியது அல்ல என்று மாகாண சபைகள் அமைச்சர் இப்போது இந்த நாடாளுமன்றத்தில் கூறியது உண்மையா அல்லது சாணக்கியன் குறிப்பிடுகின்றபடி சட்டமூலம் உயர் நீதிமன்ற பரிந்துரைகளை முழுமையாக உள்ளடக்கியது என்பது உண்மையா?

* சாணக்கியன் சமர்ப்பித்த தனிநபர் சட்டமூலத்தின் ஊடாக மகளிர், இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு வாய்ப்பு உண்டா?

* 1987 ஆம் ஆண்டின் மாகாண சபை சட்டமூலத்தை மீண்டும் கொண்டு வருவதில் என்ன சிக்கல் உள்ளது?

– இந்த நான்கு விடயங்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் நிலைப்பாடு யாது என்பதை அறிவதற்காக சட்டமா அதிபரின் கருத்துக் கோரப்பட்டிருந்தது.

கடந்த ஏப்ரல் ஏழாம் திகதி கோரப்பட்ட இந்த விடயங்களுக்கு நேற்று மே 6ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சட்டமாக அதிபரின் பரிந்துரை யாது என்பதைத் தரக்கூடிய தயார் நிலையில் அரச சட்டத்தரணி வரவில்லை என்பது தெரிவுக் குழுவில் விசனத்துக்குரியதாக சுட்டிக்காட்டப்பட்டது என அறிய வருகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை தெரிவுக்குழு மீண்டும் கூடும் போது சட்டமா அதிபரின் கருத்து தெரிவுக் குழு முன்பாகவைக்கப்படும்என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாகாண சபை தேர்தல் விவகாரம் தொடர்பில் இந்தத் தெரிவுக்குழுவின் கூட்டங்களுக்கு தேர்தல் ஆணையாளர்நாயகம்பிரசன்னமாகிவருகின்றஅதே சமயம், அடுத்த கூட்டத்திற்கு ஆணையத்தில் அங்கம் வகிக்கும் ஆணையாளர்கள் அனைவரின் கருத்தையும் உள்வாங்குவதற்காக அவர்கள் அனைவரையும் அழைக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வந்தது.

## மேலும் நீடிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான தீர்மானம், நாடாளுமன்றத்தில் 139 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று நாடாளுமன்றம் கூடியபோது, அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதம் இடம்பெற்றது.

விவாதத்தின் இறுதியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது ஆதரவாக 145 வாக்குகளும், எதிராக 6 வாக்குகளும் கிடைத்தன.

எதிராக எதிரணியில் இருந்து 6 வாக்குகள் மாத்திரமே அளிக்கப்பட்டன. எனினும், ஆளும் தரப்பின் பெரும் ஆதரவுடன் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் மூலம் நாட்டில் அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்துக்கு அமுலில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கைக்குழந்தையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது, கைக்குழந்தை ஒன்றின் என்புத் தொகுதி உட்பட நான்கு மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன. முன்னதாக அடையாளம் காணப்பட்டவற்றிலிருந்து, ஒரு சிறு குழந்தையின் என்புத் தொகுதி உட்பட இரண்டு மனித என்புத் தொகுதிகள் நேற்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டன.

247ஆம் இலக்கமிடப்பட்ட சிறு குழந்தையின் என்புத் தொகுதியானது, சேதமடையாத வகையில் மண்ணோடு சேர்த்து பதப்படுத்தப்பட்டு, பாதுகாப்பாகச் சுற்றப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. இந்த என்புத் தொகுதி இன்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கடந்த 10 நாள்களில், மனித எச்சங்களுடன் தொடர்புடைய 14 முக்கிய சான்றுப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. 82 முதல் 96 வரை இலக்கமிடப்பட்ட இந்தச் சான்றுப் பொருள்கள் அனைத்தும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் முதலாவது மற்றும் இரண்டாவது அகழ்வுத் தளங்களில் இருந்து இதுவரை மொத்தமாக 259 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் 254 மனித என்புத் தொகுதிகள் இதுவரை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

07▶

## கைக்குழந்தையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைக்குழந்தைகளின் எச்சங்கள் மீட்கப்பட்டு வருவது, இப்பகுதியில் இடம்பெற்ற கடந்த கால மனித உரிமை மீறல்களின் கோர முகத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்று மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.







## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இந்தத் தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தலைமையகப் பொலிஸார் மற்றும் தடயவியல் பிரிவு பொலிஸார், நீரில் மூழ்கியிருந்த இரு ஆண்களின் சடலங்களையும் மீட்டனர். மீட்கப்பட்டவர்கள் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்? என்ற விவரங்கள் இதுவரை அறியப்படவில்லை. அவர்கள் தொடர்பான அடையாளங்களைக் கண்டறியும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நீதிமன்ற அனுமதியைப் பெற்று, சடலங்களைப் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் நேற்று இரவு எடுக்கப்பட்டன.

இவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனரா அல்லது வேறு ஏதும் காரணங்கள் உண்டா என்பது குறித்து மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







# நமது கருத்து

உலகத் தமிழ்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஒய்யாரக் கொண்டை!

'ஒய்யாரக் கொண்டையாம், தாழம்பூவாம், உள்ளே இருக்குமாம் ஈரும் பேனுமாம்' என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு. வெளியே பார்ப்பதற்கு தாழம்பூ சூடிய கொண்டை போல இருந்தாலும் உள்ளே தரம் குறைவாகவோ அல்லது தூய்மையின்றியோ ஈறு, பேன் நிறைந்திருப்பது போல என்பதை குறிக்கும் பேச்சு மொழி இது.

சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் பேராசிரியர் ருவன் ரணசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது பெருமிதத்துடன் கூறிய விடயத்தை அவதானித்த போது இந்த ஒய்யாரக் கொண்டை பேச்சு மொழிதான் நினைவுக்கு வந்தது.

இலங்கையின் தனிநபர் வருமானம் வரலாற்றில் முதல்முறையாக 5,000 அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளதாக அவர் நேற்று நாடாளுமன்றத்தில் பீற்றிக் கொண்டார்.

"பல தசாப்தங்களாக இந்த நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அமைச்சுகளை நிர்வகித்து, நாட்டை அழித்து, வங்குறோத்தடையச் செய்த ஒரு தரப்பிடமிருந்து நாட்டையே நாங்கள் பொறுப்பேற்றோம். இப்போது அவர்கள் வந்து எமக்கு முன்னேற்ற அறிக்கை குறித்தும், 'எல் - போர்டு' அரசாங்கம் குறித்தும் அறிவுரை கூறுகிறார்கள். அவர்களின் அரசியல் கட்சிகளும் இப்போது அழிந்து, திக்குத் தெரியாமல் அலைந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் நாட்டைப் பொறுப்பேற்று ஓராண்டிற்குள், கடந்த வருடத்தில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 109 பில்லியன் டொலர்களை அண்மித்தது. அதேபோல், வரலாற்றில் முதல்முறையாக எமது நாட்டின் தனிநபர் வருமானம் 5,000 டொலர்களைத் தாண்டியுள்ளது. நீங்கள் பல ஆண்டுகளாக அழித்த பொருளாதாரம் இது. நீங்கள் சொன்ன அந்த 'எல் - போர்டு' அரசாங்கம் ஒன்றரை வருட காலத்திற்குள் பொருளாதாரத்தை மிகவும் சிறப்பாகவும் நிலையானதாகவும் கட்டியெழுப்பியுள்ளது. அதனால்தான், அன்று ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு வந்து, டித்வா பாதிப்பை சீர்செய்ய ஒரு ரூபா கூட கடனாகப் பெறாமல் திறைசேரி மூலமே இழப்பீடுகளை வழங்குவோம் என்று கூறினார்." - என நாடாளுமன்றத்தில் பேராசிரியர் ருவன் ரணசிங்க 'ஒய்யாரக் கொண்டை' ஸ்டைல் காட்டுவது போல பேசினார்.

நாட்டின் தனி நபர் வருமானம் 5,000 அமெரிக்க டொலரை எட்டட்டும். பணவீக்கம், பொருள்கள் விலை அதிகரிப்போடு வருமானமும் சற்று அதிகரிக்கும். இத்தகைய உயர்வு தானாகவே வரும். ஆனால் அத்தகைய வருமானம் கொண்ட நாட்டில் ஏழ்மை விகிதம் கண்மூடித்தனமாக அதிகரித்துச் செல்கின்றது. ஒய்யாரக் கொண்டைக்குள் ஈரும் பேனும் நிறைந்து கிடப்பது போன்ற நிலைமைதான் இங்கு உள்ளது.

குடும்பவருமானத்தைகணக்கெடுத்துத் தான் தேசிய வறுமை கோடு அளவிடப்படுகின்றது. குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் இந்த ஜனவரி மாதத்தில் பதிவு செய்யப்பட்ட கணக்கின்படி ஆக குறைந்தது மாதம் 16,730 ரூபா வருமானம் இருக்க வேண்டும். அப்படி இருக்கின்ற குடும்பம்தான் வறுமைக் கோட்டுக்கு மேற்பட்ட குடும்பமாக கருதப்படும். இப்போது நாட்டில் காற்பங்கினர் - 25 சத வீதத்திற்கும் அதிகமானோர் - வறுமைக்கோட்டின் கீழ் திண்டாடுகின்றனர் என்று பொருளாதார நிபுணர்கள், அவதானிகள், உலக வங்கித் தரப்பினர் போன்றோர் வருத்தம் தெரிவிக்கின்றனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகின்றது.

அதை நிமிர்த்தி, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை விடுத்து, தனிநபர் வருமானம் 5,000 டொலர் எல்லையைத் தாண்டி விட்டது என்று - ஏட்டுச் சுரக்காய் கிட்டிவிட்டது என்று - தம்பட்டம் அடிப்பதில் அர்த்தமில்லை. அதனை சுற்றுலாத்துறைப் பிரதி அமைச்சர் கவனத்தில் கொள்வது நல்லது.





# காணாமல்போனோர் விடயம் வெறும் காகிதக் கோப்பல்ல!

## அது ஆறாத கண்ணீர் என்று வடக்கு ஆளுநர் உருக்கம்

”எமது வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை, “காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம்“ என்பது வெறும் அரச திணைக்களங்களின் காகிதங்களில் உறங்கும் ஒரு சாதாரண கோப்புச் சார்ந்த விடயமல்ல. இது ஆயிரக்கணக்கான குடும்பங்களின் ஆறாத கண்ணீரோடும், பல தசாப்த கால ஏறுமாறான காத்திருப்போடும், விவரிக்க முடியாத வலியோடும் பின்னிப்பிணைந்த ஓர் அதிஉணர்வுபூர்வமான மனிதாபிமானப் பிரச்சினையாகும். அந்த உணர்வோடு அதை அணுக வேண்டும்.” – என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வு வேலைத்திட்டம், வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் நேற்று வியாழக்கிழமை மாலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திறன் விருத்தி நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு விசேட அதிதியாக உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த “சூம்“ தொழில்நுட்பத்தின் ஊடாக இணைந்துகொண்டு வரவேற்புரையை நிகழ்த்தியதுடன், இந்த விழிப்புணர்வு வேலைத்திட்டத்தின் நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தினார். அதனைத் தொடர்ந்து, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நிகழ்வுக்கு அனுப்பி வைத்திருந்த விசேட செய்தி உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து விசேட உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்,

“போரால் மிக நீண்டகாலமாகப் பேரழிவுகளைச் சந்தித்த வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை, “நிலைமாறுகால நீதிப் பொறிமுறை” என்பது மிக முக்கியமானதொரு பேசுபொருளாகும். ஒருவர் உயிரிழந்தால் ஏற்படும் வலியை விட, அவர் எங்கு இருக்கின்றார், என்ன ஆனார் என்றே தெரியாமல் “காணாமல் ஆக்கப்படுவதால்” ஏற்படும் வலி பல மடங்கு கொடியது. என்றாவது ஒரு நாள் தமது உறவு வாசற்கதவைத் தட்டிவிட மாட்டார்களா என்ற நம்பிக்கையில் காத்திருக்கும் அந்தக் குடும்பங்களின் வலியை, அவர்களைத் தவிர வேறு எவராலும் முழுமையாக உணர்ந்து கொள்ள முடியாது.

நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில், ஏனைய அலுவலகங்கள் இழப்பீடுகளை வழங்குவது மற்றும் இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாமையை உறுதிப்படுத்துவது போன்ற கட்டமைப்புச் சார்ந்த விடயங்களைக் கையாளுகின்றன. ஆனால், இந்தக் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மாத்திரமே மனித உயிர்களுடனும், உணர்வுகளுடனும் நேரடியாகத் தொடர்புபடும் தளத்தில் இயங்குகின்றது. இந்த வேறுபாட்டையும் இதன் ஆழத்தையும் அதிகாரிகள் முழுமையாகப் புரிந்துகொண்டால்தான், இன்றைய இந்த விழிப்புணர்வுச் செயலமர்வின் உண்மையான நோக்கத்தை உங்களால் உள்வாங்க முடியும்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து, அந்தக் குடும்பங்களுக்குரிய நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பொறிமுறை ஒருபுறம் சுயாதீனமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால், அதற்குச் சமாந்தரமாக, எமது நிர்வாகக் கட்டமைப்பு இந்தக் குடும்பங்களுக்கு ஆற்ற வேண்டியகடமைகளைச்சரிவரச்செய்துள்ளதா என நாம் ஒருகணம் சுயபரிசோதனை செய்து பார்க்க வேண்டும்.

துயரங்களால் துவண்டுபோய் எமது அரச அலுவலகங்களின் படிகளை நாடி வரும் அந்த மக்களை, நாம் அவர்களுக்குரிய கௌரவத்துடன் நடத்தினோமா? அவர்களின் தேவைகளைச் சிரமேற்கொண்டு பூர்த்தி செய்தோமா? அல்லது “பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக“, ஏற்கனவே பெருந்துயரில் தவிக்கும் அந்த உறவுகளை நாமும் அலைக்கழித்து, அதிகாரத்தின் இறுமாப்புடன் அலட்சியப்படுத்தியிருக்கின்றோமா?

இந்தக்குற்றச்சாட்டைநான்அனைத்து அதிகாரிகள் மீதும் ஒட்டுமொத்தமாகச் சுமத்தவில்லை. ஆனால், அவர்களுக்கு உதவும் விடயத்தில்கூட எமது அதிகாரிகளிடத்தில் ஒருமித்த, மனிதாபிமான மிக்க நிலைப்பாடொன்று இன்னமும் முழுமையாக உருவாகவில்லை என்றே நான் கருதுகின்றேன்.

நீதியைத் தேடும் பொறிமுறை ஒருபுறம் தொடரும் அதேவேளை, அந்தக் குடும்பங்களின் அன்றாடப் பொருளாதார இருப்புக்காகக் கிடைக்க வேண்டிய காணாமல் ஆக்கப்பட்டவரின் ஓய்வூதியம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உள்ளிட்ட கொடுப்பனவுகளை எவ்வித தாமதமுமின்றிப் பெற்றுக்கொடுக்க எமது அதிகாரிகள் முன்னின்று உழைக்க வேண்டும்.

நிர்வாகச் சேவையில் பல தசாப்த கால அனுபவமுள்ளவன் என்ற அடிப்படையில், காலம் கடந்த இறப்புக்களைப் பதிவு செய்வதில் பதிவாளர்கள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்களை நான் நன்கு அறிவேன். ஆனால், ஒருவரைக் காணாமல் போனவராக அல்லது “இறந்தவராகக் கருதி“, அவருக்கான சான்றிதழைப் பதிவு செய்வதற்குக் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஊடாக உள்ள வாய்ப்புகளை எமது அதிகாரிகள் எந்தளவுக்குப் பயன்படுத்தியிருக்கின்றார்கள் என்ற கேள்வி என்னுள் எழுகின்றது.

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் புலன் விசாரணைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் பதிவாளர்கள் இதனை மிக இலகுவாக

தொடர்ச்சி▼









# காணாமல்போனோர் விடயம் வெறும் காகிதக் கோப்பல்ல!

## அது ஆறாத கண்ணீர் என்று வடக்கு ஆளுநர் உருக்கம்

தொடர்ச்சி▲

மேற்கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாகக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார் என்ற சான்றிதழைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற தகவலையும் இங்கு முன்வைக்கின்றேன்.

இங்கே ஒன்றை நாம் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். சிலர் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக, “இறந்தவராகக் கருதும் சான்றிதழை அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளார் சான்றிதழை” பெற்றுக்கொண்டால், காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் நடவடிக்கைகளோ அல்லது உண்மையை அறியும் செயன்முறையோ அத்துடன் முடங்கிவிடும் எனத் தவறான வதந்திகளைப் பரப்பி, மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளனர். இது முற்றிலும் தவறானது. நிர்வாகத் தேவைகளுக்காகவும், நன்மைகளைப் பெறுவதற்காகவும் இச்சான்றிதழைப் பெற்றுக்கொள்வதால், நீதியை நோக்கிய விசாரணைகளோ தேடல்களோ ஒருபோதும் நிறுத்தப்படமாட்டாது. அவை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்பதை நீங்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

அடுத்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், குறிப்பாக வடக்கில் செம்மணி உள்ளிட்ட பல இடங்களில் மனிதப் புதைகுழிகள் அகழ்வு செய்யப்பட்டு வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோருக்கும் இந்தப் புதைகுழிகளுக்கும் இடையிலான தொடர்புகளை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் சட்டரீதியாகக் கையாளுவதற்கு அப்பால், எமது நிர்வாக அதிகாரிகளுக்கு இதில் ஒரு பாரிய பொறுப்பு உள்ளது. குறித்த புதைகுழிகள் உள்ள பிரதேசங்களின் புவியியல் அமைவு, சூழல், மற்றும் அந்தப் பகுதிகளில் நீண்டகாலமாக வசிக்கும்மக்களின்சாட்சியங்கள்ஊடானகடந்த கால நிலைமைகளை முறையாக ஆவணப்படுத்தி, நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் சமர்ப்பிக்கும் பெரும் பொறுப்பு கிராம அலுவலர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் உரியது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இதுவரையில் அது திருப்திகரமான முறையில் அறிக்கையிடப்படவில்லை என்றே கருதுகின்றேன். இது தொடர்பில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் உங்களுக்கு மேலதிகத் தெளிவுபடுத்தல்களை வழங்கும் என நம்புகின்றேன்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசு, காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கோ அல்லது புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளுக்கோ எவ்விதத் தடைகளையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, அதற்கான முழுமையான நிதி ஒதுக்கீடுகளையும் தடையின்றி வழங்கி வருகின்றது. கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த எவராலும் இவ்வாறானதொரு வெளிப்படையான ஆதரவு வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கு மிக முக்கிய காரணம், இந்த அரசில் அங்கம் வகிக்கும் பலரும் கடந்த காலங்களில் இதேபோன்று காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி அலைந்தவர்கள்தான். காணாமல் ஆக்கப்படுதலின் கொடூர வலி அவர்களுக்கு மிக ஆழமாகத் தெரியும். அதனால்தான், இந்த விடயத்தில் முழுமையான நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதிலும், இந்தக் குடும்பங்கள் கௌரவமாக நடத்தப்பட்டு அவர்களுக்கான பொருளாதார நன்மைகள் உறுதிசெய்யப்பட வேண்டும் என்பதிலும் அவர்கள் உறுதியாக இருக்கின்றார்கள்.

அரசின் இந்த நேர்மறையான நிலைப்பாட்டை, அதிகாரிகளாகிய நாம் மக்களின் நலனுக்காகச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறான ஒருங்கிணைப்புக் கலந்துரையாடல்களை நாம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தி, எமது முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதுடன், நாம் எதிர்கொள்ளும் சவால்களையும் பேசித் தீர்க்க முடியும் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

இந்த விழிப்புணர்வுச் செயலமர்வு பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் ஒரு புதிய நம்பிக்கையையும், நிர்வாகத்தில் ஒரு காத்திரமான மாற்றத்தையும் ஏற்படுத்தும் என நம்புகின்றேன்.” – என்றார்.

ஆளுநரின் உரையைத் தொடர்ந்து, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.தற்பரனால் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டம் மற்றும் அதன் கட்டளைகள் (மனிதப் புதைகுழிகள் மற்றும் மாவட்ட, பிரதேச செயலாளர்களின் பொறுப்புகள் உள்ளடங்கலாக) தொடர்பில் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக பணிப்பாளர் சபை உறுப்பினர் ரி.யோகராஜாவால் காணாமல்போனோர் விவகாரம் தொடர்பான புள்ளிவிவரங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன.

அதன்பின்னர், நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.தற்பரனின் நெறிப்படுத்தலில் உத்தியோகத்தர்களுடனான கேள்வி – பதில் அங்கம் இடம்பெற்றது.

காணாமல்போன ஆட்கள் தொடர்பான கோவைகளின் முன்னேற்றங்களை இற்றைப்படுத்தல் மற்றும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் புதிய கொள்கைக் கட்டமைப்பு குறித்து அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டுவதை நோக்கமாகக் கொண்டு இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலர்கள், மாவட்டப் பிரதிப் பதிவாளர் நாயகங்கள், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர், சமூகசேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.





# வெலிசற இடைத்தங்கல் முகாமிலிருந்து தப்பியோடி இணைய மோசடியில் ஈடுபட்ட 30 வெளிநாட்டவர்கள்

## பொரலஸ்கமுவ 10ஆம் மைல்கல் பகுதியில் மீளக் கைது

வெலிசற இடைத்தங்கல் முகாமிலிருந்து தப்பியோடி, இணையம் ஊடாக சட்டவிரோத நிதி மோசடிகளில் ஈடுபட்டு வந்த 30 வெளிநாட்டவர்களை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பொரலஸ்கமுவ, 10ஆம் மைல்கல் பகுதியில் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டடமொன்றில் தங்கியிருந்த போதே, கல்கிஸ்ஸை பிராந்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தால் இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்களில் இரண்டு யுவதிகள் உட்பட 21 சீனர்கள் மற்றும் ஒரு யுவதி உட்பட 9 வியட்நாமியர்கள் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்களிடமிருந்து 10 கணினிகள், 29 அப்பிள் வகை அலைபேசிகள் மற்றும் இணைய வசதிகளைப் பெறுவதற்கான உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேபோன்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் 152 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் தற்போது கைது செய்யப்பட்டுள்ள இந்த 30 பேரும் உள்ளடங்கியிருந்தனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் வெலிசற இடைத்தங்கல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதே, அங்கிருந்து தப்பிச் சென்று மீண்டும் இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்ட நிலையில் இவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸை பிராந்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பொரலஸ்கமுவ பகுதியில் உள்ள இருமாடிக் கட்டடத்தின் மேல் தளத்தை மாதந்தோறும் 15 இலட்சம் ரூபாய் வாடகைக்கு எடுத்து, இவர்கள் இந்த மோசடியை முன்னெடுத்து வந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியுடன் நடத்தப்பட்ட விசாரணையில், இவர்கள் சில நாள்களுக்கு முன்னரே இந்தப் பகுதிக்கு வந்துள்ளமை கண்டறியப்பட்டது.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் எவரிடமும் விசா அல்லது கடவுச்சீட்டுகள் இருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிஸ்ஸை பிராந்திய குற்றப் புலனாய்வுப் பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

# மாணவர்களிடையே வேகமாகப் பரவும் காய்ச்சல் தெனியாயவில் 4 பாடசாலைகள் இன்று மூடல்!




பாடசாலை மாணவர்களிடையே காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதன் காரணமாக, தெனியாய கல்வி வலயத்திற்குட்பட்ட நான்கு பாடசாலைகளை இன்று மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகளின் பரிந்துரையின் பேரில், நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெனியாய வலயக் கல்விப் பணிப்பாளர் நிஷாகா ஹெட்டிகொட தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, தெனியாய மத்திய கல்லூரி, தெனியாய ராஜபக்ஷ மகா வித்தியாலயம், தெனியாய புனித மத்தியூ இருமொழி பாடசாலை மற்றும் பல்லேகம சித்தார்த்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இவ்வாறு மூடப்படவுள்ளன.

இந்தப் பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே நோய்ப் பரவல் அதிகரித்துள்ளமையைக் கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோய் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுமாறும், பிள்ளைகளுக்கு நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறச் செய்யுமாறும் சுகாதாரப் பிரிவினர் பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மர்மமாக உயிரிழந்தவரின் உடல் பாகங்கள் மேலதிக பரிசோதனைக்கு அனுப்பி வைப்பு

## சம்மாந்துறை விளினியடி பிரிவில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

வீட்டு மாடிப் படியில் இருந்து தவறி விழுந்து இறந்தவர் எனக் கூறப்படும் குடும்பஸ்தரின் சடலத்தின் சில அவயங்கள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நல்லடக்கத்திற்காக சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை சம்மாந்துறை பொலிஸ் பிரிவின் விளினியடி பிரிவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மாடிப் படியில் இருந்து விழுந்து சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என்று கூறப்படுபவரின் சடலத்தின் மீதான மரண விசாரணை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சம்மாந்துறை நீதிவான் நூர்டீன் முஹம்மட் சர்ஜுன் முன்னிலையில் இடம் பெற்றது.



இதன் போது உயிரிழந்தவரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதனால் அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக சடலம் அனுப்பி வைக்கப்பட்டது.

சட்ட வைத்திய அதிகாரியினால் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் சடலத்தின் சில அவயங்கள் கொழும்பில் உள்ள அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு மேலதிக பரிசோதனைக்கான அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்ந்து வருவதுடன் குடும்பஸ்தரின் சடலம் நேற்று உறவினர்களிடம் நல்லடக்கத்திற்காக கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 45 வயதுடைய மலயர் வீதி விளினியடி-1 பிரிவு, சம்மாந்துறைப் பகுதியைச் சேர்ந்த உதுமா லெப்பை இப்றாகீம் என்பவரே உயிரிழந்தவராவார்.

# சாய்ந்தமருது நகரசபைப் பிரகடனத்துக்கு சட்ட அங்கீகாரம் தந்தது உயர்நீதிமன்றம்

## எல்லை நிர்ணயம் மேற்கொள்ளவும் உத்தரவு

(நூருல் ஹுதா உமர், வி.ரி.சகாதேவராஜா)

சாய்ந்தமருது மக்களின் நீண்டகால அரசியல் மற்றும் சமூகப் போராட்டத்திற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி ஒன்று நீதிமன்றம் மூலம் கிடைத்துள்ளது.

சாய்ந்தமருது நகரசபை பிரகடனத் துக்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கி யுள்ள உயர் நீதிமன்றம், கல்முனை மாநகர சபை மற்றும் சாய்ந்தமருது நகரசபைக்கான எல்லை நிர்ணயங்களை மேற்கொள்ளுமாறு நேற்று உத்தர விட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பின் மூலம், 2020ஆம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்ட போதிலும் நடைமுறைக்கு வராமல் இருந்த சாய்ந்த மருது நகரசபைக்கான சட்ட அடித்தளம் மேலும் வலுப்பெற்றுள்ளது.

இதுவரை கல்முனை மாநகர சபை யின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்த சாய்ந்தமருதுக்கு தனித்த உள்ளூராட்சி அமைப்பை பெறும் பாதை இத்தீர்ப்பின் மூலம் திறந்துவைக்கப்பட்டுள்ளதாக அரசியல் மற்றும் சமூக வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

கல்முனை மாநகர சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னணியில்,




சாய்ந்தமருதைச் சேர்ந்த ஓய்வுபெற்ற சிரேஷ்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம். சலீம் மற்றும் ஏ.ஆர்.எம். அசீம் ஆகியோர் இணைந்து 2023ஆம் ஆண்டு ஜூலை மாதம் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர்.

"2020ஆம் ஆண்டு சாய்ந்தமருது நகரசபை பிரகடனம் செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கான தேர்தல் நடத்தப் படாமல் இருப்பது மக்களின் அடிப்படை உரிமை மீறலாகும். எனவே, சாய்ந்தமருது நகரசபைக்கான தேர்தலை நடத்த உத்தரவிட வேண்டும்" என மனுதாரர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, வழக்கு முடிவடையும் வரை கல்முனை மாநகர சபைக்கான தேர்தலை நடத்தக் கூடாது என உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது.

நீதியரசர்கள் ஜனக் டி.டி. சில்வா, பிரியந்த பெர்ணான்டோ மற்றும் சம்பத் அபேக்கோன் ஆகியோர் அடங்கிய அமர்வே நேற்றைய தீர்ப்பை வழங்கியது. மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சுரேன் ஞானராஜ் தலைமையிலான சட்டத்தரணிகள் ஆஜராகினர்.

சாய்ந்தமருதுக்கான தனி உள்ளூ ராட்சி சபையைப் பெற்றுக்கொள்வதற்காக ஓய்வுபெற்ற சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம். சலீம் முன்னின்று மேற்கொண்ட சட்ட மற்றும் மக்கள் இயக் கப் பணிகள் பரவலாகப் பாராட்டப்பட்டு வருகின்றன. பல ஆண்டுகளாக முன்னெ டுக்கப்பட்ட போராட்டத்தின் முக்கிய திருப்பமாக இந்த உயர் நீதிமன்றத் தீர்ப்பு பார்க்கப்படுகிறது.

சாய்ந்தமருது மக்களின் இந்த அடிப் படை உரிமை மனுவை எதிர்த்து, முஸ் லிம் காங்கிரஸின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் நீதிமன்றில் ஆஜரானார்.

# சாய்ந்தமருது நகர சபைப் பிரகடனம் சட்ட ரீதியானது

# உயர்நீதிமன்றின் நேற்றைய தீர்ப்பு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது!

## ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் தெரிவிப்பு





(பாறுக் ஷிஹான்)

உயர்நீதிமன்றம் இப்போது வழங்கி யுள்ள தீர்ப்பு கல்முனை, சாய்ந்தமருது மக்களுக்கு கிடைக்கப்பெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் கருதப்பட வேண்டும் என ஜனாதிபதி சட்டத் தரணி நிஸாம் காரியப்பர் தெரிவித்துள் ளார்.

கல்முனை மாநகர சபை தேர்தல் இடைநிறுத்தப்பட்ட விடயம் மற்றும் சாய்ந்த மருது நகரசபை தொடர்பாக உயர்நீதி மன்றத்தில் முன் வைக்கப்பட்டிருந்த அடிப் படை உரிமை மீறல் வழக்கில் நேற்று வழங்கப்பட்ட தீர்ப்புக் குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வழக்கில் எதிர் மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நிஸ ாம் காரியப்பர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கல்முனை, சாய்ந்தமருது மக்களுக்கு கிடைக்கப்பெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாக இதைக் கருத வேண்டும்.

இரண்டு மாத காலத்தினுள் எல்லை மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும், அதிலும் சாய்ந்தமருது நகர சபைக்கான எல்லை மீள் நிர்ணயமும், மற்றையது கல்முனை பகுதிக்கான எல்லையும் மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதில் மூன்று உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட வேண்டும் என நானும் வாதாடினேன். ஆனால் உரிய மாகாண சபை அமைச்சரும் எல்லை மீள் நிர்ணயம் செய்யும் ஆணைக்குழுவும் செய்ய வேண்டிய விடயம் அதுவென மன்று சுட்டிக்காட்டியது. இரண்டு மாதங்களின் பின்னர் சம்பந்தப்பட்ட தரப்பினர் எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

அதன் பின்னர் ஜனாதிபதியின் கையொப்பத்துடன் அதிவிசேட வர்த்த மானியில் அதை அறிவிக்க வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டது. இதனை நாங்கள் உண்மையில் வரவேற்கின்றோம்.

இது தவிர தற்போது சாய்ந்தமருது நகர சபை மற்றும் கல்முனை மாநகர சபைக்கான தேர்தல் தற்போது நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெ னில் இரண்டு சபைக்குமான எல்லை நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால் இந்த இரண்டு மாதத்தினுள் எல்லை நிர்ணயத்தை மேற்கொண்டு ஜனாதிப திக்கு இது தொடர்பில் அறிவித்து அதன் பின்னர் தான் தேர்தல் நடாத்துவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றமையை உணர் கின்றேன். என அவர் குறிப்பிட்டார்.

# மத்திய மலைநாட்டின் நீர் ஏந்தும் பகுதிகளில் தொடர்ந்து இடி மின்னலுடன் கூடிய கனமழை





**(மஸ்கெலியா நிருபர்)**

கடந்த சில நாள்களாக மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் மாலை வேளையில் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக நீர் தேக்கங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

கடந்த பல மாதங்களாக மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடும் வெப்பமான வானிலை நிலவியதால் இந்த மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து கொண்டே வந்த நிலையில், தற்போது மீண்டும் மாலை வேளையில் இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்து வருவதால் நீர் தேக்கங்களின் நீர் மட்டம் சற்று உயர்கிறது.

இம் மழை காரணமாக பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள், பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இப்பகுதியில் உள்ள அனைத்து நீர் ஊற்றுகள், ஓடைகள் மற்றும் ஆறுகள், நீர் வீழ்ச்சிகளில் தற்போது நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் மழை பெய்யும் வேளைகளில் நீர் தேக்கங்களுக்கு நீரை வழங்கும் சாமி மலை ஓயா, மறே ஓயா, சியத்தல கங்குல ஓயா, காட்மோர் ஓயா, காசல்ரீ நீர் தேக்கத்திற்க்கு நீரை வழங்கும் பிரதான கங்கைகளான பொகவந்தலாவ ஓயா, கெசல்கமு ஓயா, ஹட்டன் ஓயா தலவாக்கலை பகுதியில் உள்ள மேல் கொத்மலை நீர் தேக்கத்திற்கு நீரை வழங்கும் பிரதான கங்கைகளான மகாவலி கங்கை ஆகியவற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக மாலை வேளையில் கன மழை பெய்யும்போது ஆற்று பகுதியில் நீராடுவதையும் அப் பகுதிக்கு செல்வதையும் தவிர்க்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# பதுளை மாவட்டத்திலும் கடும் மழை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

**(பசறை: நடராஜா மலர்வேந்தன்)**

பதுளை மாவட்டம் உள்ளிட்ட மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் இடியுடன் கூடிய கனமழையால், மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பசறை, ஹாலி-எல, லுணுகலை, வெலிமடை, ஊவா பரணகம, பண்டாரவளை மற்றும் ஹல்துமுல்லை ஆகிய பகுதிகளில் மழைப் பொழிவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை வலுப்பெற்று பெய்து வருவதால், அன்றாட செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பல பகுதிகளில் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளமையுடன், சில தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. இதன் காரணமாக போக்குவரத்து சேவைகள் இடையூறு அடைந்துள்ளன. குறிப்பாக கிராமப்புற சாலைகள் வழியாக பயணம் செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும், மலைச்சரிவுகள் காணப்படும் பகுதிகளில் மண்சரிவு அபாயம் அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதனால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும், அவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சில இடங்களில் சிறிய அளவிலான மண்சரிவு சம்பவங்களும் பதிவாகியுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தொடர்ந்து மழை பெய்து வருவதால், எதிர்வரும் நாள்களிலும் நிலைமை மேலும் மோசமடையக்கூடும் எனக் கணிக்கப்படுகிறது.

அதேவேளை, அவசர சேவைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளமையுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மழைதொடரும்நிலையில்,பொதுமக்கள் பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைப்பிடித்து, அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை பின்பற்றுவது அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# அரச காணி முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு நேற்று மன்னார் செயலகத்தில்











(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில், காணி உரிமைச் சட்டங்கள் மற்றும் அரச காணி முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு மன்னார் நகர பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மன்னார் நகர பிரதேச செயலாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வு, குறிப்பாக இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது அதிக முக்கியத்துவம் பெறும் காணி தொடர்பான சட்டங்கள், நடைமுறைகள் மற்றும் காணி நிர்வாக செயல்முறைகள் குறித்து அரச அதிகாரிகளுக்குதெளிவூட்டும்நோக்கில்முன்னெடுக்கப்பட்டது.

இந்த செயலமர்வில் கிராம சேவகர்கள், காணி நிர்வாகத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள், காணி விடயங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள், குத்தகை முறை மற்றும் அனுமதிப் பத்திரஅடிப்படையில்காணிவழங்கல்பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள்கள் உள்ளிட்ட மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் பணியாற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு, மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தல் மற்றும் ஏற்பாட்டில், மன்னார் பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது.

மேலும், இச்செயலமர்விற்கான நிதி அனுசரணை, யுனப்ஸ் நிறுவனத்தின் விருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்து.

இந்த நிகழ்வின் பிரதான நோக்கம், அரச அதிகாரிகள் காணி தொடர்பான சேவைகளை மக்களுக்கு திறம்படவும் இலகுவாகவும் வழங்குவதற்கான அறிவையும் நடைமுறை அனுபவத்தையும் மேம்படுத்துவதாகும். அதேவேளை, அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய காணிச் சட்டங்கள், புதிய சுற்றறிக்கைகள், அவற்றின் வரைவுகள் மற்றும் நடைமுறைகள் குறித்த தெளிவூட்டலை இந்தச் செயலமர்வு வழங்கியது.

செயலமர்வின் போது அரச தனியார் காணி என்றால் என்ன? அரச காணிகளை எவ்வாறு அடையாளம் காண்பது?அரச காணிகளுக்கான சட்டபூர்வ ஆவணங்கள் எவை? அரசு அதிகாரிகள் அரச காணிகளை வைத்திருக்க முடியுமா? காணி உரிமை ஆவணங்கள் மற்றும் காணி உறுதிப்பத்திரங்களை பெறும் நடைமுறைகள்,குத்தகை அடிப்படையில் காணி பெறுவதற்கான தகுதிகள், “காணி அற்றவர்“ என்பவர் யார்? காணி உரிம வகைகள் மற்றும் உரிமை மாற்ற விதிமுறைகள், அரச காணி வழங்கப்படும் போது பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகள், குத்தகை முறையில் காணி பெற்றுக்கொள்வது மற்றும் அதனுடன் தொடர்புடைய நிதி மற்றும் நிர்வாக செயல்முறைகள் தொடர்பாக விரிவாக விளக்கப்பட்டது.

மேலும், காணி தொடர்பான பல்வேறு சட்ட மற்றும் நிர்வாக விடயங்கள் தொடர்பாக அதிகாரிகளுக்கு விரிவான விளக்கங்களும் நடைமுறை வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டன. பங்குபற்றுநர்களும் பல கேள்விகளைக் கேட்டு விளக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறான அறிவூட்டல் செயற்பாடுகள், அரச அதிகாரிகள் தங்களது பணிகளை திறமையாகவும் சட்டப்பூர்வமாகவும் முன்னெடுக்க உதவியாக அமையும் என்பதோடு மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இச் செயலமர்விற்கான வளவாளராக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீண்டகாலமாக காணி விழிப்புணர்வு செயலமர்வு துறையில் பணியாற்றிய முன்னாள் கிழக்கு மாகாண உதவி காணி ஆணையாளர் கதிர்காமத்தம்பி குருநாதன் கலந்துகொண்டு விரிவுரைகளை வழங்கினார்.

# மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் மணல் வியாபாரிகளின் அனுமதிப் பத்திரங்கள் உடனே ரத்து!

## மணல் அகழ்வு நடைபெறும் முக்கிய 3 ஆற்றுப்படுகைகளில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படும் என்றும் தகவல்

**(மன்னார் நிருபர்: எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் மணல் வியாபாரிகளின் அனுமதிப்பத்திரங்கள் உடனடியாக ரத்து செய்யப்பட்டு அவர்கள் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற மணல் விலை நிர்ணயம் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டத்தைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில், மணல் அகழ்வு மற்றும் மணல் விநியோகம் தொடர்பான இரண்டு முக்கிய கூட்டங்கள் நடைபெற்றன.

இக்கூட்டங்களில் அரசாங்க அதிபர், முப்படை அதிகாரிகள், துறைசார் திணைக்கள பிரதிநிதிகள் மற்றும் மணல் வியாபாரிகள் கலந்து கொண்டனர்.



மன்னார் மாவட்டத்தில் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் ஏழை எளிய மக்கள் மற்றும் அரசாங்க கட்டுமானப் பணிகளுக்கு நியாயமான விலையில் மணல் கிடைப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க இனிவரும் காலங்களில் துறைசார் திணைக்களங்களின் அனுமதியுடன் மேலதிகமாக அரசாங்க அதிபரின் நேரடி ஒப்புதலும் அவசியம் ஆக்கப்பட்டுள்ளது. இது குறித்த புதிய சுற்றறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படும்.

மணல் அகழ்வு நடைபெறும் முக்கிய மூன்று ஆற்றுப் படுகைகளிலும் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படும்.

மணல் கொண்டு செல்லும் அனுமதிப் பத்திரங்கள் (பர்மிட்) இதுவரை கைமுறையாக ரத்து செய்யப்பட்ட நிலையில், இனி கியூ ஆர் ஸ்கான் முறை மூலம் டிஜிட்டல் முறையில் ரத்துச் செய்யப்படும்.

இதன் மூலம் ஒரே அனுமதிப்பத்திரத்தை மீண்டும் பயன்படுத்துவது தடுக்கப்படும். பாதுகாப்பு அமைச்சினால் உருவாக்கப்பட்ட விசேட படைப் பிரிவு ஒன்று நேரடியாக அரசாங்க அதிபருடன் இணைந்து கண்காணிப்பு பணிகளில் ஈடுபடும்.

இந்தப் பிரிவினர் மாவட்டத்திற்கு வெளியிலிருந்து நியமிக்கப்படுபவர்கள் என்பதால், தகவல் கிடைத்த 20-30 நிமிடங்களுக்குள் சம்பவ இடத்திற்குச் சென்று சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் மணல் வியாபாரிகளின் அனுமதிப்பத்திரங்கள் உடனடியாக ரத்து செய்யப்பட்டு, அவர்கள் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள். -என்றார்.

இந்த நடவடிக்கைகள் மூலம் மணல் விநியோகத்தைச் சீர்ப்படுத்தவும், சட்டவிரோத மணல் அகழ்வை முற்றாகக் கட்டுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மணல் அகழ்வு, விலை நிர்ணயம் தொடர்பான கூட்டம் மன்னாரில் நேற்றுப் பெரும் இழுபறியோடு முடிந்தது!



**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்டத்தில் மணல் விலை நிர்ணயம் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் நேற்று வியாழக்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்ற நிலையில், அந்தக் கூட்டத்தில் இருந்து மன்னார் நகர சபைத் தலைவர் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோர் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துதல் மற்றும் மணல் விலையை முறைப்படுத்துதல் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனின் வழிகாட்டலில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் உபாலி சமரசிங்க தலைமையில் இந்த விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள அதிகாரிகள், நகர சபை மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், மணல் அகழ்வு மற்றும் விற்பனையில் ஈடுபடுகிறவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்டத்தில் மணல் விலை சடுதியாக அதிகரித்துள்ளமையைக் கட்டுப்படுத்துதல், அனுமதிப்பத்திரமின்றி முன்னெடுக்கப்படும் மணல் அகழ்வுகளைத் தடுத்தல், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள மணல் அகழ்வுக்கான அனுமதிப் பத்திரங்களை மீண்டும் வழங்குவது குறித்து ஆலோசித்தல் என்பன குறித்து ஆராயப்பட்டது.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே, மன்னார் நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள் கூட்டத்திலிருந்து அதிரடியாக வெளியேறினர்.

“முன்னைய கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு முரணான வகையில் இன்றைய கூட்டத்தின் போக்கு அமைந்துள்ளது. மக்களின் நலனை புறந்தள்ளி எடுக்கப்படும் இவ்வாறான முடிவுகளை ஏற்க முடியாது.“ - எனக் குறிப்பிட்டு, மன்னார் மாவட்டத்தில் மணல் மாபியாக்களின் செயல்பாடு தொடர்பில் சுட்டிக்காட்டி, இப்படி மன்னார் மாவட்டத்தை நாசம் செய்வது தொடர்பில் தங்களது கருத்தை வெளியிட்டு அவர்கள் வெளிநடப்பு செய்தனர்.

மணல்விலையைஒழுங்குபடுத்துவது தொடர்பாக அதிகாரிகளுக்கும் ஏனைய தரப்பினருக்கும் இடையே ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. நீண்ட நேர விவாதங்களின் பின்னரும், முறையான விலை நிர்ணயம் அல்லது மணல் அகழ்வு தொடர்பான உறுதியான முடிவு எதுவும் தெரிவிக்க முடியாத நிலையில் கூட்டம் நிறைவுக்கு வந்தது.

இதனால் மன்னார் மாவட்டத்தில் நிலவும் மணல் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு பிரச்சினைக்கு இன்னும் தீர்வு எட்டப்படாத நிலை தொடர்கிறது.




# பல்கலைக்குத் தெரிவான மாணவர்களுக்கு கற்கை நெறித் தெரிவு, வழிகாட்டல் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்கை நெறி தெரிவு மற்றும் விண்ணப் பித்தல் வழிகாட்டல் நிகழ்வு சாய்ந்தமருது பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் மயோன் சமூக சேவை அமைப்பின் அனுசரனையில் மாளிகைக் காடு பாவா ரோயல் மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம வளவாளராக ஆசிரியர் சபீர் ஹமீட் கலந்து கொண்டு பல்கலைக்கழகங்களின் பல்வேறு துறைகளிற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விண்ணப்பித்தல் மற்றும் கற்கை நெறி தெரிவு தொடர்பான வழிகாட்டலை வழங்கினார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழக முன்னாள் உபவேந்தர் மற்றும் சமூகவியல் துறை பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பல்கலைக்கழக நடைமுறை தொடர்பில் விசேட உரையாற்றினார்.

மேலும் மயோன் சமூக சேவை அமைப்பு சார்பாக நிகழ்வின் கௌரவ அதிதியாக திடீர் மரண விசாரணை அதிகாரி, மொழிபெயர்ப்பாளர் ஏ.எச்.அல் ஜவாஹீர் கலந்து சிறப்பித்தமையோடு இளைஞர் சேவை அதிகாரி அன்வர் அப்துல் கபூரும் கலந்து சிறப்பித்தார்.

அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த சுமார் 120 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.













# தி.மு.கவும் அ.தி.மு.கவும் சேர்ந்தும் ஆட்சியமைத்தாலும் அது சாத்தியமே

## தமிழக ஆளுநர் அர்லேகர் கூறுகின்றார்

“தமிழ்நாட்டில் தி.மு.க. – அ.தி.மு.க. சேர்ந்து ஆட்சி அமைக்க உரிமை கோரினாலும் சாத்தியம்தான்.”

– இவ்வாறு கூறியிருக்கின்றார் தமிழ்நாடு ஆளுநர் அர்லேகர்.

தமிழகத் தேர்தல் முடிந்த நிலையில் அதில் முன்னிலை பெற்றிருக்கும் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் இன்னமும் அறுதிப் பெரும்பான்மையை எட்டக் கூடிய சட்டசபை உறுப்பினர்களைத் தம் பக்கம் திரட்ட முடியவில்லை.

தி.மு.க. கூட்டணியில் இருந்து தாவிய காங்கிரஸ் வைத்திருக்கும் 5 இடங்களையும் சேர்த்து விஜய்யின் த.வெ.கவிடம் 113 இடங்கள் உள்ளன. ஆட்சியமைக்க பெரும்பான்மையான 118 இடங்களுக்காக தி.மு.க. கூட்டணியில் மீதம் உள்ள வி.சி.க., கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் ஆதரவு கோரி வருகின்றனர். த.வெ. கவினர்.

அவர்கள் பிடிகொடுக்காமல் பேசுகின்றமையால் இழுபறி நீடிக்கிறது. 118 எம்.எல்.ஏக்களின் பெயர்களை கொடுத்தால் தான் ஆட்சியமைக்க அழைப்பேன் என தமிழக பொறுப்பு ஆளுநர் அர்லேகர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

நேற்று இரண்டாவது முறையாக விஜய் சென்று சந்தித்தபோதும் ஆளுநர் பெரும்பான்மையை கொண்டு வரவே வலியுறுத்தி வழியனுப்பி வைத்துள்ளார்.

இந்நிலையில் ஆங்கில ஊடகத்திற்கு ஆளுநர் அர்லேகர் அளித்த பேட்டி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பேட்டியில் அவர் கூறியவை வருமாறு:

”பெரும்பான்மை இல்லாதமை விஜய்க்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்குமான பிரச்சினை. 118 இடங்கள் இல்லாமல் ஆட்சி அமைக்க அழைக்க முடியாது. சிறிபான்மை அரசு ஆட்சி அமைத்துக் குதிரைப் பேரம் நடத்துவதை அனுமதிக்க முடியாது.

118 எம்.எல்.ஏ.க்களை கண்முன் நிறுத்துங்கள் என்று நான் கூறவில்லை. விஜய் பதவியேற்பை நான் தடுப்பதாக எப்படி சொல்ல முடியும்? விஜய் பெரும்பான்மை எண்ணுடன் வந்தால் ஆட்சி அமைக்க அழைக்கத் தயார். அடுத்த 3 நாள்களுக்கு இப்படியே நீடித்தால் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.” என்று தெரிவித்துள்ளார்.

மேலும் அதிமுக, திமுக இணைந்து ஆட்சியமைக்க கோரவும் அரசியலமைப்புப்படிசாத்தியமேஎன்றுகேள்விஒன்றுக்கு அவர் அவர் தெரிவித்துள்ளார்.



# பிடி கொடுக்காமல் நழுவும் கம்யூனிஸ்ட்கள், வி.சி.க.!

அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்காக, இப்போது தி.மு.க. கூட்டணியில் வெற்றி பெற்ற கட்சிகளின் தயவை நாடி நிற்கிறார் விஜய்.

இது தொடர்பாக விஜய்யின் த.வெ.க. தரப்பில் இருந்து கம்யூனிஸ்ட் தலைவர்களிடம் பேசி வருகிறார்கள்.

அதேபோல் தமது பழைய பாசத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனிடம் நேற்று முன்தினம் மாலை ஆதவ் அர்ஜுனா நேரடியாகவே பேசி இருக்கிறார்.

முதலில் ஆலோசித்து முடிவை தெரிவிப்பதாக சொன்ன திருமாவளவன், இரவு 8 மணிக்குமேல் ஆதவ் தரப்பில் இருந்து தொடர்பு கொண்டபோது வேறு விதமாக பதில் சொல்லி இருக்கிறார் என்றும் கூறப்படுகின்றது.

கம்யூனிஸ்ட்களும் த.வெ.க. தரப்புக்கு பிடிகொடுக்கவில்லை.

என்றாலும் விஜய்யை ஆட்சியமைக்க ஆளுநர் அழைப்பு விடுக்க வேண்டும் என்ற கருத்தை இந்த மூன்று கட்சிகளுமே – இரண்டு கம்யூனிஸ்ட்களும், வி.சி.கவுமே – வலியுறுத்தி வருகின்றன.

அதேநேரத்தில், இந்தக் கட்சிகளை தி.மு.க. கூட்டணியிலேயே தொடர்ந்து நீடிக்க வேண்டும் என தி.மு.க. தலைவர் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

# தமிழகத்தில் நிலையான ஆட்சி அமைய முடிவு எடுக்கும் அதிகாரம் ஸ்டாலினுக்கு!

## தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் தீர்மானம்







தமிழகத்தில் நிலையான ஆட்சி அமைய வேண்டும் என்பதை முன்னிட்டு அரசியல், நிர்வாக நிலைமைகளை ஆராய்ந்து அவசர முடிவுகளை உடனடியாக எடுக்கும் அதிகாரம் மு.க.ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற தி.மு.க. எம்.எல். ஏக்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னையில் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. எம். எல். ஏக்கள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் 4 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில், காங்கிரஸ் தனது பழைய குணத்தை மாற்றிக்கொள்ளவில்லை என்றும், தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகிய காங்கிரஸை கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், நிலையான ஆட்சியமைய அவசர முடிவெடுக்க ஸ்டாலினுக்கு அதிகாரம் வழங்கியும், மதவாத சக்திகளுக்கு இடமளிக்க கூடாது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தி.மு.க. எம். எல். ஏக்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாவது,

1) நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும், இந்த வெற்றிக்காகத் தோளோடு தோள் நின்று பாடுபட்ட தோழமை இயக்கங்களுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பெரும்பான்மைபெற்றுஆட்சிஅமைக்கும் சூழல் உருவாகாமல் போனாலும் கூடுதல் தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சியானது நம்மை விட 17.43 லட்சம் வாக்குகளை மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது. நமக்கும் அவர்களுக்குமான வாக்கு விழுக்காடு வேறுபாடு என்பது 3.52 விழுக்காடு மட்டுமே. அந்த வகையில் வலிமையான, அதிக அளவிலான நம்பிக்கையை தமிழ்நாட்டு மக்கள் வைத்துள்ளார்கள் என்பதே உறுதியாகிறது.

2) சட்டமன்றத் தேர்தல் களத்தில் தலைவர் மு.க.ஸ்டாலினின் உழைப்பு மலையளவு ஆகும். தினந்தோறும் பொதுக் கூட்டங்கள் வாயிலாக முழங்கினார். நடைபயணங்களின் மூலமாக பல கிலோ மீற்றர் தூரம் நடந்தும் மக்களோடு கலந்துரையாடினார். லட்சக் கணக்கான மக்களைத் தனித்தனியாகச் சந்தித்ததும் அவரின் சாதனை ஆகும். இத்தகைய மு.க.ஸ்டாலினுக்கு இக்கூட்டம் தனது இதயத்தின் அடித்தளத்தில் இருந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

3) நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத வகையில் முடிவுகள் வந்துள்ளது. இது நெருக்கடியான, சிக்கலான காலகட்டம் ஆகும். இன்னொரு தேர்தலுக்கு தமிழ்நாடு தயாராக இல்லாத நிலையில், தமிழ்நாட்டில் நிலையான ஆட்சி அமைய வேண்டும் என்பதே நமது முதன்மை நோக்கம். அதே வேளையில், திராவிட இயக்கத்தின் கொள்கைகளுக்கு ஊறு விளைவிக்கும் மதவாத சக்திகளுக்கு இடமளிக்கக் கூடாது என்பது உள்ளிட்டவற்றையும் பரிசீலித்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.– என்று தெரிவிக்கப்பட்டது.

# கட்சி தாவிச் செல்லாமல் தடுக்கும் நோக்கில் அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் புதுச்சேரிக்கு!



புதுச்சேரி தவளக்குப்பம் தனியார் சொகுசு விடுதியில் தங்கவைக்கபட்டுள்ள அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை சந்திக்க வந்துள்ளார் அ.தி.மு.க. கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி.

புதுச்சேரி தவளக்குப்பம் தனியார் சொகுசு விடுதியில் தங்கவைக்கபட்டுள்ள அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை சந்திப்பதற்காகவே வருகை தந்துள்ளார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி.

தமிழகத்தில் நிலவும் அரசியல் அசாதாரண சூழலில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் புதுச்சேரிக்கு வரத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில், நேற்று மதியம் புதிய விடுதி வளாகத்துக்கு அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் மாற்றப்பட்டனர். இன்னும் இரண்டு நாள்களுக்கு 40 பேர் இங்கு தங்கிக் கொள்ளும் வகையில் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் இதை நீடிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஓ.எஸ். மணியன், தளவாய் சுந்தரம், சேவூர் ராமச்சந்திரன், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் மோகன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சொரத்தூர் ராஜேந்திரன், புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் அருண்மொழி தேவன், அக்ரி கிருஷ்ணமூர்த்தி, மேட்டூர் வெங்கடாசலம் உள்பட 30 எம்.எல்.ஏக்கள் உள்ளனர்.

இதுபற்றி அ.தி.மு.க. உயர் வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

"த.வெ.க. ஆட்சி அமைப்பதற்கு தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக பல்வேறு கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் காங்கிரஸ் கட்சி மட்டுமே ஆதரவு தெரிவித்துள்ளது. கூடுதலாக 5 எம்.எல்.ஏக்கள் தேவைப்படும் நிலையில் அ.தி.மு.கவில் ஒரு தரப்பினர் த.வெ.கவை ஆதரிக்க விரும்புவதும் தெரிகிறது.

த.வெ.க. ஆட்சி அமைக்க உரிமை கோரிய நிலையில் அ.தி.மு.க. தரப்பில் இருந்து ஒரு தரப்பினர் விலகி முடிவு எடுப்பதைத் தடுக்கும் வகையில் அக்கட்சி இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்று தெரிவித்தனர்.

புதுச்சேரி தனியார் விடுதியில் தங்கியிருந்த சி.வி. சண்முகம் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்ய டில்லி புறப்பட்டார். இப்போது மயிலம் தொகுதியில் அ.தி.மு.க. எம்.எல்.ஏவாக அவர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இச்சூழலில் புதுச்சேரியில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் தங்கியுள்ள விடுதிக்கு அ.தி.மு.க. பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி வந்தடைந்தார். அவர் எம்.எல்.ஏக்களை சந்தித்து ஆலோசனை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# ஹன்டா வைரஸ் தாக்கிய கப்பலில் பயணித்த பிரித்தானியர்களைத் தனிமைப்படுத்தத் திட்டம்!

ஹன்டா வைரஸ் தாக்கிய கப்பலில் பயணித்த பிரித்தானியர்கள் தனிமைப் படுத்தப்படவுள்ளனர்.

அர்ஜென்டினாவில் இருந்து புறப்பட்ட MV Hondius என்ற சுற்றுலா கப்பலில் ஹன்டா வைரஸ் (Hantavirus) பரவிய தால், அதில் பயணித்த பிரித்தானிய குடி மக்களை 45 நாள்கள் தனிமைப்படுத் தப்பட வேண்டும் என UKHSA (UK Health Security Agency) அறிவித்துள் ளது.

இந்தக் கப்பலில் பயணித்த 150 இற்கும் மேற்பட்டோர் 23 நாடுகளைச் சேர்ந்தவர்கள். இதில் 19 பிரித்தானிய பயணிகளும் 4 பிரித்தானிய குழுவின ரும் உள்ளனர்.

தற்போது, 2 பிரித்தானியர்கள் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், 56 வயதான முன்னாள் பொலிஸ் அதி காரி Martin Anstee நெதர்லாந்தில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் கப்ப லில் வழிகாட்டியாக இருந்தவர்.

கப்பலில் பயணித்த 69 வயது பிரித்தா னியர் ஒருவர் தென்னாப்பிரிக்காவில் சிகிச்சை பெற்று வருகிறார். ஜேர்மனி மற்றும் நெதர்லாந்தைச் சேர்ந்தவர்கள் உட்பட பலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 8 பேருக்கு ஹன்டா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு என்றும் 3 பேர் உயிரிழந்தனர் எனவும் உலக சுகாதார அமைப்பு (WHO) கூறி யுள்ளது.

ஹன்டா வைரஸ் பொதுவாக எலி கள் மூலம் பரவுகிறது. ஆனால், இந் தக் கப்பலில் யுனெநள எவசயலை எனப் படும் ஹன்டா வைரஸ் வகை கண்டறி யப்பட்டுள்ளது.

இது அரிதாக மனிதர்களிடையே பரவக்கூடியது. அறிகுறிகள் வெளிப்பட 8 வாரங்கள் வரை ஆகும். சுமார் 6 வாரங்கள் வரை கூட நோய்த்தொற்று வெளிப்படாமல் இருக்கலாம் என நிபு ணர்கள் கூறுகின்றனர்.

கப்பல் தற்போது ஸ்பெயின் Canary Islands நோக்கி செல்கி றது. அங்கு பயணிகள் அனைவரும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப் படுவார்கள் என்றும் பிரித்தானிய பயணி கள் தனியார் விமானம் மூலம் நாடு திரும்புவார்கள் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களும் அவர்களின் குடும்பங்களும் கடுமையான மன அழுத்தத்தில் உள்ளனர். பிரித்தா னிய குடிமக்களைப் பாதுகாப்பாக நாடு திரும்பச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் கூறியுள் ளார்.

# 347 உக்ரேனிய ட்ரோன்களை இடைமறித்ததாக ரஷ்யா அறிவிப்பு

347 உக்ரேனிய ட்ரோன்களை இடைமறித்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்றுக் காலை முழுவதும் ரஷ்ய தலை நகரை நெருங்கிக் கொண்டிருந்த சுமார் 30 உக்ரேனிய ட்ரோன்கள் இடைமறிக் கப்பட்டன என்று மாஸ்கோ மேயர் செர்ஜி சோபியானின் தெரிவித்தார்.

பெர்ம் நகரின் யூரல் மலைப் பகுதி யில் உள்ள தொழிற்சாலைகள் மீது உக்ரேனிய ட்ரோன்கள் தொடர்ந்து இரண்டாவது வாரமாக தாக்குதல் நடத் தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மொத்தத்தில், நாடு முழுவதும் மற் றும் இணைக்கப்பட்ட கிரிமியாவில் 347 ட்ரோன்களை இடைமறித்ததாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் கூறியது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து ரஷ்யாவுக்கு எதிராக, ஒரே இரவில் நடத்தப்பட்ட மிகப்பெரிய ட்ரோன் தாக்குதல்களில் இது ஒன்றாகும்.

தென்மேற்கு பெல்கோரோட் பகுதியில் நடந்த உக்ரேனிய ட்ரோன் தாக்குதலில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டார் என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித் தனர்.

இதற்கிடையில், ரஷ்யா 102 ட்ரோன் களை ஏவியதாக உக்ரைன் தெரிவித் தது. வடகிழக்கு கார்கிவ் பகுதியில் நடந்த ரஷ்யத் தாக்குதல்களில் பலர் காய மடைந்ததாகக் கூறப்படுகிறது.


Rostec State Corporation


Alina Smutko, Reuters

# இன்றைய ராசி பலன்கள் - 08.05.2026




இன்று நீங்கள் பதற்றமான மன நிலையில் இருப்பீர்கள். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும். விவாதம் செய்வதை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை சிறப்பாக செய்ய கவனமாக இருப்பது உதவியாக இருக்கும்.

உறவில் ஸ்திரத்தன்மை தக்கவைக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடுதல் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப் புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானத்தில் ஈடுபடுவதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம்.




இன்று காணப்படும் குழப்பமான சூழ்நிலை உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அத்தகைய சூழ்நிலையை கையாள்வது கடினம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட செய்ய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களின் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மை விளையும்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் தலைவலி மற்றும் சளித் தொல்லையால் அவதிப்பட நேரலாம்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். அவற்றின் மூலம் லாப கரமான பலன் கிடைக்கும். நீங்கள் இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப் படுவீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் திருப்தியும் சாதித்த உணர்வும் உங்களிடம் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்கள் துணையுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று பயணம் காணப்படுகின்றது. இது புதியதொடர்புகள் கிடைக்க பயனுள்ள வாய்ப்பை உருவாக்கித் தரும்.

பணியிடத்தில் நன்மையான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டைப் பெறுவீர்கள்.

பயணத்தின்போது உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடி மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். என் றாலும் குடும்பத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய நேரும்.

ஆரோக்கியமான உணவு உட்கொள்வதன் மூலம் திடமாக இருக்கலாம். அசௌகரியத்தை சமாளிக்கலாம்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். இதன் மூலம் திருப்தி உண்டாகும். வெற்றி காண எளிய அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நீங்கள் திறமை யாக செயல்படுவீர்கள்.இதனால் திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் நண்பர் இல்ல விழாவில் பங்கு கொள்ள பயணம் மேற்கொள்ளும் போது உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களை கழிப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை காண அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி மற்றும் சளைக்காத குணம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

எதிர்மறை விளைவுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் சிறப்பாக பணியாற்ற தடையாக இருக்கும். சில கட்டுப்பாடுகள் சிறந்த பலன் காண தடையாக இருக்கும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.உறவில் நல்லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

வரவும் செலவும் கலந்து காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவது கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக நரம்பு பிரச்சினை ஏற்படலாம். அமைதியாக இருந்து பிரார்த்தனை மேற்கொள்ளவும்.




இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள். உங்களிடம் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்களின் மாறுபாடற்ற மனநிலை காரணமாக நீங்கள் திறமையான முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ளவும் அதனை குறித்தநேரத்தில் முடிக்கவும் பணியிடச் சூழல் உகந்ததாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும். மந்தமான தருணங்கள் காணப்படும். எனவே இருப்பதைக் கொண்டு மகிழ வேண்டும். எதிர்காலத்திற்காக செயல்பட முயல வேண்டும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயல்பட இயலும்.

திரைப்படம் பார்த்தல் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற நிகழ்சிகள் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின்போது பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா பயிற்சியின் மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.05.2026




இன்று முன்னேற்றகரமான பலன் களைக் காண்பீர்கள். இன்று புத்துணர்ச்சி யுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகளில் பங்கு கொள்வது உங்களுக்கு லாபகரமாக அளிக்கும்.

உங்கள் திறமை காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. ஆன்மீக பயணங்கள் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். பயணங்கள் மூலம் பலனுள்ள மாற்றங்கள் ஏற்படும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உறவின் சிக்கல்களை தீர்க்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இதற்காக நீங்கள் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சிறந்த செயல்திறம் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் உருவாகலாம். அந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் பணியில் முன்னேற்றம் காணலாம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள்.

பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




பொறுமையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நீங்கள் சாதக மான பலன்களை காணலாம். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். வெற்றி காண முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பனியின் போது நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். சமநிலை அணுகுமுறை மேற்கொண்டு நல்ல புரிந்துணர்வை பராமரியுங்கள்.

அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும். பணத்தை விவேகத்துடன் கையாள்வதன் மூலம் நிலைமையை சிறப்பாக சமாளிக்கலாம்.

# சிறி சபாரத்தினத்தின் 40ஆவது நினைவேந்தல்






தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறி சபாரத்தினம், அவருடன் கொல்லப்பட்ட 300க்கும் மேற்பட்ட போராளிகள் மற்றும் பொது மக்களின் 40ஆவது நினைவு அஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் மே 6 ஆம் தேதி கோண்டாவில், கோகுல வீதி, அன்னங்கை ஒழுங் கையில் தலைவர் சிறி சபாரத்தினம், கொல்லப்பட்ட இடத்தில் அனுஷ் டிக்கப்பட்டது.